# உண்மையான விசுவாசம் என்பது என்ன?

## அறிமுகம்

"விசுவாசம்" என்பது நம்பிக்கை என்றே பொருள்படும். கிறிஸ்துவ வேதாகமம் எபிரெயர் 11:6 வசனத்தில் சொல்கிறது,"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் ". எல்லா மதங்களும் ஆண்டவர் மேல் விசுவாசம் உண்டென்று கூறுகின்றன. ஆனாலும் எல்லா வகையான விசுவாசமும் அவருக்குப் பிரியமானவையல்ல.

விசுவாசத்துக்கு நம்பிக்கைக்குரிய பொருள் ஒன்று இருக்கவேண்டும்

நாம் நமது விசுவாசத்தை நமது மேலும் வைப்பதில்லை. ஒரு படகுக்கு நங்கூரம் இடும்போது, அந்த நங்கூரத்தின்மேல் நாம் நம்பிக்கை கொள்வதால் நாம் நங்கூரத்தை எடுத்து படகுக்குள் வைப்பதில்லை.

**நாம் நமது விசுவாசத்தை, என்றென்றும் மாறாதவரும் நித்தியமானவரும் நம்பிக்கைக்குரியவருமான ஆண்டவர் மேலும் அவரது வாக்குறுதிகள் மேலும் வைப்போமாக.**

மரணத்துக்குப் பின்னான வாழ்வைப் பற்றி பேசும்போது, நாம் நமது விசுவாசத்தை ஏதோ ஒரு மனிதன் மேல் வைக்கமுடியாது. ஒரு மனிதன் ஒருநாள் மரிக்கவேண்டியவன். எனவே, அவன் பல வகையான வாக்குறுதிகளைச் செய்தாலும் அவன் மரித்துவிட்டால் அவற்றை நிறைவேற்ற அவனால் முடியாது. ஆண்டவரோ எல்லையற்றவர். என்றென்றும் வாழ்பவர். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தும் அறிந்தவர். எனவே, இத்தகைய ஆண்டவர் தமது

எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவார் என்று நாம் நம்பிக்கைகொள்ளலாம். மற்றவர் பொய்யர்களானாலும் ஆண்டவர் அப்படியல்ல. சங்கீதப் புத்தகம் இதைப்பற்றி என்ன சொல்கிறது என்று உனக்குத் தெரியுமா?

- "தேவன் சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக." (ரோமர் 3:4)
- "வானமும் பூமியும் ஒழிந்துபோம் , என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத்தேயு 24:35)

நம்மைப் படைத்தவரை அறிந்துகொள்வதும், அவரோடு சமாதானமாய் இருப்பதும், மரித்த பிறகு அவரோடு இருப்பதுவுமே விசுவாதத்தின் நோக்கமாகும்.

இருப்பினும், அப்படி நாம் ஆராதிக்கும் ஆண்டவர் நாம் மிகவும் விரும்பும் இந்தக் குறிப்பிட்ட தேவைகளைச் சந்திப்பதாக வாக்களிக்காவிட்டால், நாம் இறுதியில் அதிக ஏமாற்றமடைவோம்.

குருட்டு விசுவாசம், உண்மையான விசுவாசம் என்று விசவாசம் இருவகைப்படும்.

## ❑ குருட்டு விசுவாசம்

குருட்டு விசுவாசம் என்பது நாம் விசுவாசிக்கும் ஆண்டவர் நமது உள்ளத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவார் என்று நாமே



நினைத்துகொண்டு அவர்மேல் விசுவாசம் வைப்பதாகும். ஆனால் அவர் அப்படி செய்வேன் என்று வாக்களித்ததே இல்லை.

**நாம் குருட்டு விசுவாசத்தின் மேல் நம்பிக்கை வைத்திருப்பது ஆபத்தானதாகும். நாம் விசுவாசிக்கும் ஆண்டவர் நம்மைக் காப்பாற்றுவார், பரலோகத்தில் நமக்காக ஓர் இடத்தை ஆயத்தமாக்குவார் என்று நாம் எண்ணிக்கொள்ளலாம். ஆனால் அவர் அப்படிச் செய்வதாக வாக்களிக்காவிட்டால் நாமே அப்படி நினைத்துகொள்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.**




## ❑ உண்மையான விசுவாசம்

உண்மையான விசுவாசம் என்பது ஒருவாராய்த் திகழ்பவரும் படைத்தவரும், வாக்குமாறாதவருமான ஜீவனுள்ள தேவன் மீது நமது நம்பிக்கையை வைப்பதாகும். (படம் 2 பார்க்கவும்)

நான் கிறிஸ்துவ பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்தபோது நான் பின்வருபவற்றை அறிந்துகொண்டேன்:

- அது யோவான் 1:3-ல் இவ்வாறு கூறுகிறது, "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. " எனவே, இயேசுவே நம்மைப் படைத்த ஆண்டவராவார். மற்றவர் அனைவரும் படைப்புகளாவர். அப்படி இருக்கையில் அவர்கள் தம்மைப் படைத்தவரையே உயிர்வாழ்வதற்கு நம்பியுள்ளனர். நாம் அவர்களை ஆராதிக்கக்கூடாது. படைத்தவராகிய ஆண்டவரையே விசுவாசிக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் ஒருவரையொருவர் ஆராதித்துக்கொண்டிருப்போம்.
- இயேசு சொன்னார் (யோவான் 10:30). "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் ". பரிசுத்த வேதாகமம் 1 யோவான் 2:23-ல் மீண்டும் இவ்வாறு கூறுகிறது, "குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான். ". ஒருவராய்த் திகழும் படைத்தவரான ஜீவனுள்ள ஆண்டவர் (இயேசு)) நமது உண்மையான வாழ்வின் தேவைகளைப் பற்றிய இதுபோன்ற பல வாக்குறதிகளை நமக்கு வேதாகமத்தில் தந்துள்ளார்:
- நமது எல்லா பாவங்களையும் மன்னிப்பது. நம்மை ஆண்டவரின் பிள்ளைகளாக்குவது. நம்மை



மரணத்திலிருந்து எழுப்புவது. நாம் மரிக்கும்போது பரலோகம் செல்வதற்கான நிச்சயம். நமக்கு சமாதானம் தருவது. சோதனைகளை மேற்கொள்வது. கிறிஸ்துவின் சாயலில் நம்மை மறுரூபமாக்குவது. நமது வாழ்வில் வாழ்வது. நம்மை விட்டுவிலகாமலும் நம்மைக் கைவிடாமலும் இருப்பது. இன்னும் பல.

- அப்போஸ்த்தலர் பவுல் இவ்வாறு எழுதியுள்ளார், 2 கொரிந்தியர் 1:19-20 "இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல், ஆம் என்றே இருக்கிறார். எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே."

இப்படிப்பட்ட அன்பு மிகுந்த, நம்பிக்கைக்குரிய ஆண்டவர் இயேசு மேல் நாம் நமது விசுவாசத்தை வைக்கலாம். பின்வருவது உண்மையான விசுவாசத்தை விளக்குகிறது.




படம் 2

விசுவாசம் இருந்தால் மட்டும் போதாது. "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்." (யாக்கோபு 2:17). நாம் நன்மை செய்வதினால் இரட்சிப்பைப் (நித்திய ஜீவன்) பெறுகிறோம் என்பது இதன் அர்த்தமாகாது. வேதாகமம் எபேசியர் 2:8-10-ல் இவ்வாறு சொல்கிறது," கிருபையினாலே விசுவாத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் ; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் ; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

உண்மையான விசுவாசத்தை வேறொரு வழியில் எடுத்துக்காட்டலாம்.

உதாரணத்துக்கு ஒரு நாற்காலி உனது உடல் எடையைச் சுமக்கும் என்று நீ நம்பலாம். இருப்பினும் நாற்காலியின் மீது நிற்கவோ அல்லது அதன் மீது ஒரு காலைக்கூட வைக்கவோ நீ விருப்பம் கொள்ளாமல் இருக்கலாம். இவ்விரண்டையும் நீ

செய்ய விரும்பாததினால் நீ நாற்காலியின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறாய். ஆனால் நீ இரண்டு கால்களையும் கொண்டு நாற்காலியின் மீது நிற்பாயானால் நீ நாற்காலியை முழுவதும் நம்புகிறாய் என்பதை எடுத்துக்காட்டுகிறாய்.

ஆண்டவர் மேல் நாம் கொள்ளும் விசுவாசமும் இதுபோலதான். நமது பாவங்களில் இருந்து நம்மை முற்றிலும் இரட்சிக்கவும் ஜீவனை அடையவும் நாம் இயேசுவின் மேலும் அவரது வாக்குறுதிகளின் மேலும் முழுவதுமாக சார்ந்திருப்பதன் மூலம் அவர் மேல் உள்ள விசுவாசத்தை நாம் வெளிப்படுத்துகிறோம்.

இந்த மாதிரியான விசுவாசத்தைப் பெற்றிருக்கவும் நித்திய ஜீவனை நீ அடைவதை உறுதிசெய்யவும் நீ உண்மையாக விரும்புகிறாயா? அப்படி உனது பதில் ஆமாம் என்பதாய் இருக்குமானால், எப்படி உண்மையான விசுவாசத்தைப் பெற்றிருப்பது என்பதையும் ஆண்டவரோடு சமாதானமாய் வாழ்வது எப்படி என்பதையும் பின்வரும் வரிகள் விளக்குகின்றன.

- நாம் பாவிகள் என்று ஆண்டவர் கூறுவதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். வேதாகமம் சொல்கிறது," எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவராகி " (ரோமர் 3:23). பாவம் என்பது செய்வினையான முரட்டாட்டங்கொண்ட நிலையாகும் அல்லது நமது மனசாட்சியில் எழுதப்பட்ட ஆண்டவரின் கட்டளைகளின்மேல் கொள்ளும் செயப்பாட்டுவினையான அக்கறையின்மையாகும்.
- பாவத்தின் விலையானது நரகத்தில் அனுபவிக்கும் நித்திய தண்டனையாகும் என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ஆவிக்குரிய வகையில் ஆண்டவரிடமிருந்து பிரிந்திருப்பது), (ரோமர் 6:23).




நல்ல செயல்கள், தத்துவம் அல்லது மதம் போன்ற சொந்த முயற்சிகளால் மனிதன் ஆண்டவரை அடைய தொடர்ந்து முயலுகிறான் என்பதை இந்த வரைப்படத்தில் உள்ள அம்புகள் எடுத்துக்கூறுகின்றன.

- அடுத்து, உனக்குப் பதிலாக இயேசு சிலுவையின் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து உனது பாவங்களுக்கான விலையை செலுத்தினார் என்ற உண்மையை ஏற்றுக்கொள். "...தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தாராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." (ரோமர் 6:23).

உனது சொந்த மனசாட்சிக்கு விரோதமாக நீ செய்த சில தவறான

காரியங்களைத் தியானிக்க சில நிமிடங்களை எடுத்துக்கொள்.

ஆண்டவரிடம் அவற்றிற்காக மன்னிப்பு கேட்டுக்கொள். அவருடைய உதவியால் அவருக்குக் கீழ்ப்படிய நீ விரும்புவதாக அவரிடம் இப்போது சொல்.இயேசு மூன்று நாட்களுக்குப் பிறகு பாவத்தையும் மரணத்தையும் தோல்வியடையச் செய்து மரணத்திலிருந்து எழுந்தார் என்பதையும் நம்புவாயாக. " (1கொரிந்தியர் 15:3-6)



அவர் சொன்னார், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6 ).

நம்மை ஆண்டவரிடமிருந்து பிரிக்கும் பிரிவை இணைக்கும் பாலமாக, நமது பாவங்களுக்கான விலையைச் செலுத்த, நாம் மரிக்க வேண்டிய இடத்தில் மரிக்கும்படி தமது குமாரன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார்.
**இதைச்சிந்தித்துப்பார்! இயேசு உனது பாவங்களுக்காக எவ்வளவு துன்பப்பட்டு மரித்தார் என்பதை ஒரு கணம் தியானித்துப்பார்.**இயேசு ஏன் நான் மரிக்கவேண்டிய இடத்தில் மரிக்கவேண்டும்." என்று நீ கேட்கலாம். நீரில் முழுகிக்கொண்டிருக்கும் ஒரு மனிதனை காப்பாற்றுவதற்கு நன்கு நீந்தவும் காப்பாற்றவும் தெரிந்த ஒருவர் தேவை என்பது உனக்குத் தெரியும். அதுபோலவே, பாவமில்லாத ஒருவரின் மரணமே பாவம் நிறைந்த மனிதரை அவர்களின் பாவத்திலிருந்து காப்பாற்ற முடியும். **இயேசு பாவம் செய்ததே இல்லை.** (எபிரெயர் 4:15) **எனவே நம்மை நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்கு நாம் மரிக்கவேண்டிய இடத்தில் மரிப்பதற்கு** அவர் ஒருவரே தகுதியானவராவார். இப்போது இவை அனைத்தையும் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது.

➢ **நாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் ஆண்டவரின் அன்பையும் மன்னிப்பையும் நமது வாழ்வில் அனுபவிக்கமுடியும். வேதாகமம் சொல்கிறது,** "அவர்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களுக்கும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் தந்தார்" (யோவான் 1:12).

➢ நாம் தனிபட்ட அழைப்பினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறோம். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்." என்று இயேசு சொன்னார். (வெளிப்படுத்தல் 3:20)




**சுயம் கட்டுப்படுத்தும் வாழ்வு**
சு - சுயம் அரியணையின் மேல்
\+ - கிறிஸ்து வாழ்வின்வெளியில்

➢ நாம் விசுவாசத்தினால் ஜெபம் மூலம் இயேசுவை நமது வாழ்வில் ஏற்றுக்கொள்கிறோம். ஜெபம் என்பது ஆண்டவருடன் பேசுவதாகும். நீ கூறும் சொற்களைக் குறித்து ஆண்டவர் அக்கறை செலுத்துவதில்லை. உமது மனப்போக்கிலேயே அக்கறை கொள்கிறார். இதுபோன்ற




ஜெபத்தைக் கூறலாம்:

**"கர்த்தராகிய இயேசுவே, எனக்கு நீர் தேவை. எனது பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். எனது வாழ்வின் கதவைத் திறந்து உம்மை எனது இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்கிறேன். எனது**



**பாவங்களை மன்னித்து எனக்கு நித்திய வாழ்வு தந்ததற்காக நன்றி செலுத்துகிறேன். எனது வாழ்வின் சிங்காசனத்தை நீர் ஆளுகை செய்யும். நீர் விரும்பும் மனிதராக என்னை மாற்றியமைத்தருளும். ஆமென்."**

அப்படி இந்த ஜெபம் உனது உள்ளத்து விருப்பத்தை வெளிப்படுத்துவதாய் அமையுமானால் இப்போதே இந்த ஜெபத்தைக் கூறு. இயேசு வாக்களித்தபடி உனது வாழ்வில் வருவார். நீ ஒரு முறை அவரை அழைத்தால் போதும் ஏனெனில் அவர் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரேயர் 13:5) என்று வாக்களித்துள்ளார். இயேசு நடுமையத்தில் ஆளும் உனது வாழ்வை வடது வட்டம் பிரதிநிதிக்கிறது. இப்போது அவர் உனது வாழ்வில் இருப்பதற்காக அவருக்கு நன்றி செலுத்து.

நன்றி செலுத்துதல் என்பது ஆண்டவர் மேலும் அவரது வாக்குறுதிகள் மேலும் உனக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துவதாகும். எபிரெயர் 11:6 கூறுகிறது. அவருடைய வாக்குறுதிகளின் அடிப்படையில் இவற்றை இப்போது நீ அறிந்துகொள்ளலாம்:

- **இயேசு உனது வாழ்வில் வந்துவிட்டார் (வெளிப்படுத்தல் 3:20)**
- **உனது பாவங்கள் மன்னிக்க ப்பட்டன(கொலோசேயர் 1:14)**
- **நீ தேவனுடைய பிள்ளையாகிவிட்டாய்(யோவா ன் 1:12)**
- **நீ நித்திய வாழ்வைப் பெற்றுக்கொண்டாய் (யோவான் 5:24)**




**கிறிஸ்து நடத்தும் வாழ்வு**
**சு-கிறிஸ்துவுக்கு அடிபணிந்திருப்பது**
**+ - கிறிஸ்து அரியணையில்**

- **அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை (எபிரேயர் 13:5)**

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதைவிட அற்புதமான காரியம் வேறு எதுவும் உனக்கு நடக்கமுடியுமா? ஆண்டவர் உனக்குச் செய்தவைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்த நீ விரும்புகிறாயா? இதோ நன்றி செலுத்தும் ஜெபம்:

**"அன்புள்ள ஆண்டவரே எனது எல்லா பாவங்களையும் மன்னித்து, எனக்கு நித்திய ஜீவனை அளித்து, என்னை உமது பிள்ளையாக்கிக்கொண்டதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். எனது வாழ்வுக்குள் வந்ததற்காக நன்றி. நீர் என்னை விட்டு விலகுவதுமில்லை என்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்களித்ததற்காகவும் நன்றி. இதை இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்."**

நன்றி செலுத்துவது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பதுகூடாதகாரியம்" (எபிரெயர் 11:6)

"உண்மையான விசுவாசம் என்பது என்ன?" என்பதை இப்போது நீ அறிந்துகொண்டாய் என்று நான் நம்புகிறேன்.

மேலும் விவரங்களுக்கு 82603528 என்ற எண்ணில் N. சங்கரன் என்பவரைத் தொடர்புகொள்ளவும்.

மின் அஞ்சல்: nedungat@gmail.com or surf: www.amazingdiscovery.net